FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167244

1. District : மாவட்டம் கரூர் PS: காவல்நிலையம் வை.கு.க.பிரிவு Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 02/AC/2026 Date: நாள் 05.05.2026

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 [AS AMENDED IN 2018] Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.04.2026 Date to : நாள் வரை மாலை சுமார் 04.30 மணி
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.05.2026 Time : நேரம் 08.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.05.2026 Time : நேரம் 09.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 1 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கரூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V.K. ராஜசேகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தருப்பண்ணன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1959 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஓரான்ஸ்போர்ட் (g) Address : முகவரி 151, மூன்றாவது தெரு, அருணாச்சல நகர் சணப்பிரட்டி, கரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. தர்மானந்தன் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியல் தட்டச்சு செய்து தனித் தாள்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5/5/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

5/5/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.05.2026 AT 09.00 மணி

Name: பெயர் K. தினகரன்
Rank: நிலை ஆயுதப்படை No. எண் .....
உ.நி. க. பார்வை அதிர்.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.02/AC/2026 u/s 7(a) of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் K.சாமிநாதன் ஆகிய நான் 05.05.2026 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது திரு.V.K. ராஜேந்திரன், த/பெ கருப்பண்ணன், 151, மூன்றாவது தெரு, அருணாச்சல நகர், சணப்பிரட்டி, கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி ஒரு கணினி மூலம் தட்டச்சு செய்த புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர், V.K. ராஜேந்திரன், த/பெ கருப்பண்ணன், 151, மூன்றாவது தெரு, அருணாச்சல நகர், சணப்பிரட்டி, கரூர் மாவட்டம், 9843065919, பெறுநர், உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர் மாவட்டம், ஐயா, நான் கரூர் டவுண் பகுதியில் பரணி டிரான்ஸ்போர்ட்ஸ் என்ற பெயரில் கடந்த 45 ஆண்டுகளாக பொதுமக்கள் போக்குவரத்துக்காக பேருந்து நிறுவனம் நடத்தி வருகிறேன். எனது நிறுவனத்தில் 4 பேருந்துகள் வெவ்வேறு வழித்தடங்களில் இயங்கி வருகின்றன. இதில் கரூரில் இருந்து பள்ளபட்டி வழியாக திண்டுக்கல் வழித்தடத்தில் TN 47 AE 4798 என்ற பேருந்து இயங்கி வருகிறது. இப்பேருந்தின் பாடி வேலைக்காகவும், பெயிண்டிங் வேலைக்காகவும் கரூர் - கோவை ரோட்டில் உள்ள Pee Tee Coach Builders (P) Ltd., என்ற நிறுவனத்தில் பேருந்தை கடந்த 30.03.2026-ம் தேதியன்று அட்மிட் செய்த பின்னர், கரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களிடம் 30.03.2026 முதல் 19.04.2026 வரை 20 நாட்களுக்கு போக்குவரத்து சேவையை தற்காலிகமாக நிறுத்தி பேருந்தில் வேலை செய்யும் விவரத்தை கடிதம் மூலம் தெரிவித்தேன். அதற்காக அரசு கட்டணம் ரூ.90/- செலுத்தினேன். ஆனால், குறிப்பிட்ட காலத்துக்குள் பேருந்து பெயிண்டிங் வேலை முடியாத காரணத்தால் மீண்டும் 20.04.2026 முதல் 09.05.2026 வரை மேலும் 20 நாட்களுக்கு போக்குவரத்து சேவையை தற்காலிகமாக நிறுத்தி, அதனையும் மற்றொரு கடிதம் மூலம் கடந்த 20.04.2026-ம் தேதியன்று கரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு தெரிவித்தேன். அதற்கும் அரசு கட்டணம் ரூ.90/- செலுத்தியுள்ளேன். மேலும், பொதுமக்களின் சேவை கருதி மேற்குறிப்பிட்ட வழித்தடத்தில் எங்களது ஸ்பேர் பஸ் ஒன்றை கடந்த 30.04.2026 முதல் இன்று வரை இயக்கி வருகிறோம். அரசு விதிகளின்படி 3 மாத காலத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு காலாண்டுக்கும் சாலைகளில் ஓடும் பேருந்துக்கு அரசுக்கு சாலை வரி (Road Tax) செலுத்த வேண்டும். இந்நிலையில், கடந்த 30.03.2026 முதல் 30.04.2026 வரை TN 47 AE 4798 என்ற எனது பேருந்து இயக்கப்படாத காரணத்தால் இந்த ஆண்டின் 2-வது காலாண்டிற்கு செலுத்த வேண்டிய தொகையில் ஏப்ரல் மாத சாலை வரியை இரத்து செய்து கொடுக்குமாறு கடந்த 30.04.2026-ம் தேதியன்று மாலை சுமார் 4.30 மணியளவில் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.தர்மானந்தன் என்பவரை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். அவர் அதனைப் பெற்றுக் கொண்டு வெளியில் இருங்கள் என்று கூறினார். நான் வெளியில் காத்திருந்த போது அவரது ஜீப் ஓட்டுநர் திரு.ரவி என்பவர் என்னிடம் வந்து உங்கள் மனு மீது நடவடிக்கை எடுக்க RTO ரூ.5,000/- கேட்கிறார் என்று கூறினார். நான் அவரிடம் ஒரு மாத சாலை வரி சுமார் ரூ.11,000/- வரும், அதனை இரத்து செய்வதற்கு ரூ.5,000/- கேட்டால் எப்படி என்று கேட்டேன். அதற்கு அவர் உங்களுக்கு சந்தேகம் இருந்தால் அவரிடமே நேரில் சென்று கேட்டுக் கொள்ளுங்கள் என்று கூறினார். எனவே, நான் மீண்டும் RTO திரு.தர்மானந்தன் அவர்களை அவரது அறையில் சென்று சந்தித்து உங்கள் டிரைவர் ரவி என்னிடம் வந்து நீங்கள் ரூ.5,000/- கேட்டதாகச் சொல்கிறாரே,

உண்மைதானா சார் என்று கேட்டவுடன் RTO என்னிடம் ஆமாம், நான்தான் கேட்டேன் என்று கூறினார். நான் அவரிடம் ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளால் மிகவும் கஷ்டப்பட்டு தொழில் செய்து வருகிறேன், எனவே 5,000/- ரூபாய் என்பது மிகவும் அதிகமான தொகையாக உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் நான் குறைவாகத்தான் கேட்டுள்ளேன், எனவே திங்கட்கிழமை நேரில் வந்து ரூ.5,000/-ஐ கொடுத்து விட்டு வேலையை முடித்துக் கொள்ளுங்கள், இல்லையென்றால் முடியாது என்று கண்டிப்பாகக் கூறி என்னை வெளியில் அனுப்பி விட்டார். ஆனால் அவருக்கு ரூ.5,000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, அரசு வழங்கும் சலுகைகளை செய்து கொடுக்க என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.தர்மானந்தன் அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நான் கடந்த வெள்ளிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை வெளியூர் சென்று விட்ட காரணத்தால் உடனே புகார் கொடுக்க வர இயலவில்லை. இத்துடன் நான் 30.03.2026, 20.04.2026 மற்றும் 30.04.2026 ஆகிய நாட்களில் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கொடுத்த கடிதங்களின் நகல்களையும், கடந்த 30.03.2026 மற்றும் 20.04.2026 ஆகிய தேதிகளில் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அரசு கட்டணம் ரூ.90/- செலுத்தியதற்கான ரசீது நகல்களையும் இணைத்துள்ளேன். மேலும், RTO திரு.தர்மானந்தன் அவர்கள் என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள Sd/- XXXXXXXXXX (V.K.ராஜேந்திரன்) 05/05/2026.

Sir, Received the Computer typed complaint on 05.05.2026 at about 08.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 08.35hrs on 05.05.2026. Sd/-(xxxxxxxx)05.05.2026. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tr.V.K.Rajendran, S/o.Tr.Karuppannan, 151, 3rd Street, Arunachala Nagar, Sanapiratti, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

5/5/26

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.